---

# சேறுவில பிரதேச சபை
# திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 பெப்ரவரி 22 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 மார்ச் 04 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 பெப்ரவரி 23 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, சேறுவில பிரதேச சபை 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேறுவில பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) திரண்ட நிதியத்தின் 2011 ஆம் ஆண்டினது ஆரம்ப மீதிக்கும் 2010 ஆம் ஆண்டின் இறுதி மீதிக்குமிடையே ரூபா 2,978,530 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிலையான சொத்துக்களுக்கான மீளளிப்பு ஒதுக்கம் உருவாக்கப்படவில்லை.

(இ) நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடங்கிய கீழே காணப்படும் சொத்துக்களது பெறுமதி நிதிசார் கூற்றுக்களில் காணப்படாமை அவதானிக்கப்பட்டது.

| | |
|---|---|
| கை வண்டி | 02 |
| 5000 லீட்டர் நீர்த்தாங்கி | 01 |
| நீர் மோட்டார் | 02 |
| பெக்ஸ் இயந்திரம் | 01 |

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

(அ) பதில் கிடைக்கப்பெறாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2011 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் ஒரு கணக்காய்வு ஐய வினாவிற்குப் பதில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் ஒரு ஐயவினாவுக்குரிய கொடுக்கல் வாங்கலினது கணிப்பிடக்கூடிய பெறுமதி ரூபா 3,008,530 ஆகும்.

(ஆ) கணக்காய்விற்கான தகவல்களைச் சமர்ப்பிக்காமை

கணக்காய்விற்குத் தேவையான தகவல்களைச் சமர்ப்பிக்காமையால் ரூபா 28,195,215 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2011 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 2,780,841 ஆகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 349,436 ஆகும்.

## 2.2 வருவாய் நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | தீர்வையும் வரியும் | 31 | 888 | (857) |
| (ii) | குத்தகை வாடகை | 2,590 | 801 | 1,789 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 141 | 148 | (07) |
| (iv) | பிற வருவாய் | 1,798 | 3,817 | (2,019) |

### 2.2.2 நிலுவையாகவுள்ள கடை வாடகை

2011 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கடைவாடகை நிலுவை ரூபா 298,023 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருவாய் நிர்வாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) களஞ்சியம்